

# ஆசிரியர் தகுதித்தேர்வு மாதிரி வினாவிடை

www.kalvisolai.com

## குழந்தை மேம்பாடும் கற்பித்தல் முறைகளும்

91. எந்த இரட்டையரின் மனப்பண்புகள் ஒரே மாதிரியாக இருக்கும்.
A) ஒரு கரு B) இரு கரு
C) A) மற்றும் B) D) ஒன்றும் இல்லை

92. ஒருகரு இரட்டையரில் பிறக்கும் குழந்தைகள் எவ்வாறு இருப்பர்
A) ஒரே பாலினமாக B) வேறுபட்ட பாலினமாக
C) இருவகையாகவும் D) மேற்கண்ட எதுவுமில்லை

93. முன்னர் அனுபவித்த ஒரு நிகழ்ச்சியை மீண்டும் நம் மனக்கண் முன் கொணார்ந்து இருத்தி, அதை உணர்த்தும் கற்பனை,
A) ஆக்கக் கற்பனை B)மீள் ஆக்கக் கற்பனை
C) அழகுணர் D) A & B)

94. பிம்பங்கள் அல்லது சாயல்களின் துணை கொண்டு நிகழும் சிந்தனை.
A) கற்பனை B)பொருண்மை C) மொழி D) அறிதிறன்

95. வெளி உலகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள உதவும் உளச்செயல்
A) பொது இயலுமை B)கற்பனை
C) அறிதிறன் D) மனவெழுச்சிபுலன்

96. புலன் உறுப்புகள் மூலம் பெறப்படும் செய்திகளைத் தொகுத்தல், சுருக்கி அமைத்தல், விரிவுபடுத்தல், நினைவு கூர்தல் என்ற உளச் செயல்களின் அடிப்படையில் நெய்சா என்பவர் கூறுவது.
A) பொருண்மை உருவாக்கம் B)அறி திறன்
C) கற்பனைப் பொருண்மை D) ஆளுமைப்பண்புகள்

97. எண்ணங்களைப் பிறர்க்குத் தெரியப்படுத்த மாந்தரால்; வகுப்பட்ட குறிகள் அல்லது அடையாளங்களின் தொகுப்பு
A) எண்ணம் B) மொழி C)சைகைகள் D) குறியீடு

98. தொடர்புள்ள பல்வேறு பொருண்மைகளையும் அவற்றுள் காணப்படும் இணைப்பினையும் விளக்க உதவுவது
A) பொருண்மைக் கருத்துப்படங்கள்
B)பொருண்மைக் கற்பனைப் படங்கள்
C) பொருண்மை ஆளுமை D) வளர்வரைவுகள்

99. ஓர் உயிரியின் உருப்பெருக்கம் அல்லது அளவு அதிகரித்தல்.
A) முதிர்ச்சி B)முன்னேற்றம்
C) வளார்ச்சி D) A மற்றும் B

100. ஒரு குழந்தையின் பிறந்து வளர்ந்த, சமூகக்கலாசாரத்தைக் குறிப்பது.
A) மரபு நிலை B)சமூக மரபு
C) பண்பாடு D) இவை அனைத்தும

101. மேம்பாடு என்பதன் செம்மை நிலை
A) முன்னேற்றம் B) முதிர்ச்சி
C) A மற்றும் B D) பரிணாமம்

102. வளர்ச்சி, முதிர்ச்சி, கற்றல் ஆகியனவற்றில் கூட்டு விளைவால் ஏற்படுவது.
A) முன்னேற்றம் B) பரிணாமம்
C) A மற்றும் B D) முதிர்ச்சி

103. ஓர்; உயிரியின் உடலியல் மாற்றங்களையும், அவை இயங்கும் விதத்திலுள்ள மேம்பாடுகளையும் ஒட்டு மொத்தமாகக் குறிப்பது ?
A) வளர்ச்சி B) மேம்பாடு
C) முதிர்ச்சி D) மேற்கண்ட எதுவுமில்லை.

104. சமூகமரபை, குழந்தைகள் தனதாக்கிக் கொள்ளும் முறை.
A)சமூக வயமாதல் B)மரபுரிமை பெறுதல்
C) இணங்குதல் D) வழிகாட்டல

105. குணாவின் நுண்ணறிவு ஈ.வு. 100 இதிலிருந்து அவரைப் பற்றி அறியப்படுவது
A) வயது சார்ந்த தேர்வுகளில் செம்மையான மதிப்பெண்கள் பெற்றவர்
B) அவர் வயதிலுள்ள 90% மாணவியரை விட அதிக தேர்ச்சி பெற்றவர்;
C) அவருடைய மனவயதையும் கால வயதையும் ஒரே அளவாய் கொண்டவர்.
D) அவருடைய காலவயதினரைவிட குறைவான மன வயதைப் பெற்றவர்;

106. சிக்கலை தீர்ப்பதற்கான திறனும் சிந்தனைத் திறனும் இணைந்த இயலுமை ....
A) கற்கக் கற்கும் திறன் B) சோதனை நுண்ணறிவு
C) செயல் விரைவு D) மனக்கட்டுப்பாடு

107. பரந்துபட்ட மன இயலுமைகளை அளப்பது
A) பொது நுண்ணறிவுத் தேர்வு B)சிறப்பு நுண்ணறிவுத் தேர்வு
C) பன்னோக்கு நுண்ணறிவு D) நுண்ணறிவு ஈ.வு

108. ஏழ்மையோடு மிகவும் தொடர்புடையது
A) உடல் சார்சிக்கல்கள் B)குடும்பம் சார் பின்னடைவுகள்
C) பிறப்புக் குறைபாடுகள் D) உயிருக்கு இடர்(துன்பம்)

109. ஒரு செல்லில் 46 குரோமோ சோமிற்குப் பதிலாக 47 இருப்பின், நேர்வது
A) டவுன் கோளாற்றுக் அரிகுறிகள் B) கிரிடிநிசம் (Cretinism)
C) ஹைட்ரோ செபாலி (Hydrocephaly)
D) மைக்கோ செபாலி (Microcephaly)

110. கீழ்க் குறித்தனவற்றுள் எது நுண்ணறிவுக்கு வெஷ்லா; தந்த வரையறையின் ஒருபகுதி
A) இயல்பான நுண்ணறிவு
B)குறியீட்டு நினை (eidetic imaginary) கற்பனையும்
C)சூழ்நிலையினை உரியவாறு திறமையாகக் கையாளுதல்
D) இட, உணர்வு சார் ஏலுமைகள்(ability)

111. ஒவ்வொரு நிலைக்குமான பீனே நுண்ணறிவுத் தேர்வில் இடம்பெற்றுள்ள தேர்வுருக்கள் (test item) இவ்வாறு இருக்கும்
A) அந்தந்த அகவையிலுள்ள சராசரித் திறனுடையோர் விடையளித்தல்
B) குருட்டு மனப்பாடத்தையும் நினைவையும் அளக்கும்
C) பிள்ளைகளின் படிக்கும் வகுப்புத் தரத்திற்குரியதாதல்
D) படைப்புத்திறனுடையோர்; சரியாக விடையளிக்கத் தக்கவாறிருத்தல்

112. நம்புமை (Reliability) அளக்கும் அனுகுமுறை ...
A) எதிர் இணைப்பு B) இரட்டை யூகம்
C) உள்ளடக்கம் D) தேர்வு மறுதேர்வு

113. கூர்ந்து நோக்கும் நேரம், நுண்ணறிவு ஈ.டு ஆகியனவற்றை தொடர்புபடுத்தும், கீழ்க்குறித்த கூற்றுகளுள் எது சரி?
A)கூர்ந்து நோக்கும் நேரம் அதிகரிப்பின் நுண்ணறிவு ஈவு கூடும்
B) கூர்ந்து நோக்கும் நேரம் அதிகரிப்பின் நுண்ணறிவு ஈவு குறையும்
C) கூர்ந்து நோக்கும் நேரம் குறையின் நுண்ணறிவு ஈவு குறையும்
D) இரண்டிற்கும் தொடர்பில்லை

114. மனித வளர்ச்சியை பாலுணர்வு வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி, சிக்மண்ட் பிராய்டு கூறும் நிலைகள்.
A) 4 B) 5 C) 6 D) 7

115. எரிக்சன் கூறும் வளர்ச்சி உளவியல் சமூக நிலைகள்.
A) 6 B) 7 C) 8 D) 9

116. குழவிப் பருவத்திலும் பிள்ளை முன் பருவத்திலும் ஆண்குழந்தை தன் தந்தையிடம் அன்பும், அதே சமயத்தில் தாயிடம் வெறுப்பும், பொறாமையும் கொண்டிருக்கும் நிலை.
A) இருமுகப் போக்குநிலை B)முரண்பாட்டு நிலை
C) குழப்பநிலை D) A மற்றும் B

117. "கூட்டாளிக் குழுப்பருவம்" எனப்படும் பருவம்.
A) குழவிப்பருவம் B)பிள்ளைப்பருவம்
C) முதிர்பருவம் D) குமரப்பருவம்

118. போலி முதிர்ச்சி நிலை எனப்படும் பருவம்.
A) பிள்ளைப்பருவம் B)தளர்பருவம்
C) குழவிப்பருவம் D) குமரப்பருவம்

119. உயிருள்ள கேள்விக்குறிகள் என்றழைக்கப்படுவோர் யார் ?
A) குழவிப்பருவத்தினர் B) பிள்ளைப்பருவத்தினர்
C) முதிர் பருவத்தினர் D) குமரப்பருவத்தினர்

120. ஸ்டான்லி ஹால் குமரப்பருவத்தை _______ எனக் குறிப்பிடுகிறர்?
A) சிக்கலான அமைதிப்பருவம்
B சிக்கலற்ற அமைதியற்றப் பருவம்
C) சிக்கலான அமைதியற்றப் பருவம்
D) இவற்றில் எதுவுமில்லை

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 91 -A | 92 - A | 93 - B | 94 - A | 95 - A | 96 - B |
| 97 - B | 98 - A | 99 - D | 100 - B | 101 - C | 102 - C |
| 103 - B | 104 - A | 105 - C | 106 - A | 107 - A | 108 - A |
| 109 - A | 110 - C | 111 - A | 112 - A | 113 - B | 114 - C |
| 115 - A | 116 - B | 117 - B | 118 - D | 119 - B | 120 - C |

## தாள்–இரண்டு – தமிழ்

91. இயல், இசை, நாடகம் என முப்பெரும் பாகுபாடு கொண்டது எந்த மொழி?
A)ஆங்கிலம், B)தமிழ், C) தெலுங்கு, D)கன்னடம்

92. நாட்டின் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவது எது?
A) நாடகம், B) இலக்கணம், C) இசை, D) நாவல்

93. தனிப்பாடலுக்கு மெய்பாடு தோன்ற ஆடுவதற்கு என்ன பெயர்?
A) நாடகம், B) கூத்து, C) நாட்டியம், D)பொம்மலாட்டம்

94. கூத்துவகைகள், நாடக நூல்கள் குறித்து யாரது உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது?
A) திருவள்ளுவர், B) உ.வே.சா,
C) ஜி.யு.போப், D) அடியார்க்கு நல்லார்

95. நாடக கலையை பற்றியும், காட்சிகள் பற்றியும், நாடக அரங்கம் பற்றியும் விரிவாக கூறியுள்ள நூல் எது?
A) சீவகசிந்தாமணி, B). யாப்பருங்கலக்காரிகை,
C). சிலப்பதிகாரம், D) குண்டலகேசி

96. மதங்க சூளாமணி என்ற நாடக ஆராய்ச்சி நூலை எழுதியவர் யார்?
A) பம்மல் சம்மந்த முதலியார், B)மறைமலை அடிகள்,
C) சுவாமி விபுலானந்தர், D) பரிதிமாற்கலைஞர்

97. நாடகப் பேராசிரியர் எனப் போற்றப்படுபவர் யார்?
A) பம்மல் சம்மந்தனார், B)பரிதிமாற் கலைஞர்,
C) சங்கரதாஸ் சுவாமிகள், D) மறைமலை அடிகள்

98. நாடகத் தமிழ் என்ற நூலை எழுதியவர் யார்?
A) அடியார்க்கு நல்லார், B) நச்சினார்க்கினியர்,
C) இளம்பூரணர், D)பம்மல் சம்மந்தனார்

99. மத்த விலாசம் என்ற நூல் எந்த காலத்தில் எழுதப்பட்டது?
A) கி.பி. 10, B) கி.பி.12,. C) கி.பி 7, D) கி.பி 15

100. மத்த விலாசம் என்ற நூலை எழுதியவர் யார்?
A)ராஜராஜசோழன், B)மகேந்திரவர்ம பல்லவன்,
C) பாண்டிய நெடுஞ்செழியன், D) அபராஜித வர்மன்

101. ராஜராஜசோழன் காலத்தில் நடத்தப்பட்ட நாடகம் எது?
A) மதங்க சூளாமணி, B) சாகுந்தலம்,
C) ராசராசேச்சுவரம், D) சிலப்பதிகாரம்

102. குறவஞ்சி நாடகங்கள் எந்த மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்டன?
A) மராட்டிய மன்னர்கள், B) நாயக்க மன்னர்கள்,
C) சோழ மன்னர்கள், D) பல்லவ மன்னர்கள்

103. உழவர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் நாடகங்களுக்கு பெயர் என்ன?
A) குறவஞ்சி, B) பள்ளு, C) பொம்மலாட்டம், D) நொண்டி

104. நொண்டி வகை நாடகங்கள் எந்த காலத்தில் தோன்றின?
A) கி.பி 10, B) கி.பி.12, C) கி.பி.17 D) கி.பி. 15

105. அருணாசலக் கவிராயரின் ராம நாடகம் எந்த நூற்றாண்டில் தோன்றியது?
A) கி.பி.15, B).கி.பி. 13, C) கி.பி 18, D) கி.பி. 19

106. ஊர்களில் தெருக்கூத்து என்னும் நாடக வகைகள் எதை மையமாக கொண்டு நடத்தப்பட்டன?
A)காப்பியங்கள், B) புராணக்கதைகள்,
C) கவிதைகள், . D) இலக்கியங்கள்

107. சமுதாய சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் எந்த நூற்றாண்டில் சிறப்பிடம் பெற்றன?
A) கி.பி. 18, B) கி.பி. 19, C) கிபி.15, D) கி.பி. 11

108. மனோன்மணியம் என்னும் கவிதை நாடகம் எப்போது எழுதப்பட்டது?
A) 1835 B)1860 C) 1891, D)1881

109. மனோன் மணியம் என்னும் நாடக காப்பியத்தை எழுதியவர் யார்?
A) பேராசிரியர் சுந்தரனார், B)அடியார்க்கு நல்லார்,
C) நச்சினார்க்கினியர், D) இளங்கோவடிகள்

110. மனோன்மணியம் எந்த ஆங்கில கதையை தழுவி எழுதப்பட்டது?
A) மறைவழி, B)குறள்வழி,
C) புத்தர் கதைகள், D) மணிமேகலை

111. மறை வழி என்ற நூலை எழுதியவர் யார்?
A) ஷேக்ஸ்பியர், B) மில்டன், C) லார்டு லிட்டன், D) ஷெல்லி

112. தமிழகத்தில் முதல் முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகம்?
A) கொடிகாத்த குமரன், B) தேசியக்கொடி,
C) கதரின் வெற்றி, D) தேசபக்தி

113. நாடக உலகின் இமய மலை என்று போற்றப்பட்டவர் யார்?
A) பரிதிமாற் கலைஞர், B)பம்மல் சம்பந்தனார்,
C) சங்கரதாஸ் சுவாமிகள், D) அவ்வை சண்முகம்

114. தமிழ் நாடக மறுமலர்ச்சித் தந்தை என நாடக உலகில் அழைக்கப்படுபவர் யார்?
A) பம்மல் சம்மந்த முதலியார், B)கந்தசாமி,
C)அவ்வை சண்முகம், D)காசி விஸ்வநாதன்

115. சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதியவர் யார்?
A) அடியார்க்கு நல்லார், B) நச்சினார்க்கினியர்,
C) இளங்கோவடிகள், D) சீத்தலைச்சாத்தனார்

116. உலகம் தட்டை இல்லை, உருண்டையானது என்று சரியாக எந்த நூற்றாண்டில் கணிக்கப்பட்டது?
A) கி.பி.15, B) கி.பி 12, C) கி.பி.18, D) கிபி 19

117. யார் சொன்ன பிறகு உலகம் உருண்டை என்று ஏற்றுக் கொண்டனர்?
A) ஐன்ஸ்டின், B). கிரகாம்பெல், C) கலீலியோ D) நிக்கோலஸ்

118. ஞாயிறு வட்டம் என்று எதை தமிழர்கள் அழைத்தனர்?
A) சூரியனை சுற்றிய பாதை, B) நிலவை சுற்றியபாதை,
C) பூமியை சுற்றிய பாதை, D) சனியை சுற்றிய பாதை

119. சூரியனிடம் இருந்து ஒளி பெற்று ஒளிவிடக் கூடியவற்றை எப்படி அழைத்தனர்?
A) விண்மீன், B) கோள்மீன்,
C) வால்நட்சத்திரம், D) கிரகணம்

120. ''திங்களை பாம்பு கொண்டற்று''– என்ற குறள் எதை குறிப்பிடுகிறது?
A) சூரிய கிரகணம், B) சந்திர கிரகணம்,
C) ராகு கிரகணம், D) கேது கிரகணம்

121. திரு.வி.க. பிறந்த ஊர் எது?
A) தண்டலம் B) போரூர் C) கோவூர் D) குன்றத்தூர்

122. தமிழ்த்தென்றல் என சிறப்பிக்கப்படுவது யார்?
A) திருவள்ளுவர் B) கம்பர்
C) திரு.வி.க. D) உ.வே.சா.

123. திரு.வி.க. இயற்றிய 'பொதுமை வேட்டல்' என்னும் தலைப்பில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை?
A) 500 B)430 C) 400 D)340

124. உடலை நீர் தூய்மை செய்யும், உள்ளத்தை எது தூய்மை செய்யும்?
A) இன்னாச்சொல் B)வாய்மை
C) பழிச்சொல் D) இனிய சொல்

125. ஆய்தம் எழுத்து எந்த எழுத்து வகையை சேர்ந்தது.
A) முதல் எழுத்து B) சார்பெழுத்து
C) மெய்யெழுத்து D) இனவெழுத்து

126. முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை
A) 216 B) 30 C) D) 247 C) D)147

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 91 -B | 92 - A | 93 - C | 94 - D | 95 - C | 96 - C |
| 97 - A | 98 - D | 99 - C | 100 - B | 101 - C | 102 - B |
| 103 - B | 104 - C | 105 - C | 106 - B | 107 - B | 108 - C |
| 109 - A | 110 - A | 111 - C | 112 - C | 113 - B | 114 - B |
| 115 - A | 116 - A | 117 - C | 118 - A | 119 - B | 120 - B |
| 121 - A | 122 - C | 123 - B | 124 - B | 125 - B | 126 - B |

தொடரும் – 4